பத்திரிக்கை செய்தி

புதிதாக மின்கம்பம் அமைக்க லஞ்சம் பெற்ற வழக்கில் அப்போதைய மின்வாரிய உதவி பொறியாளர் கரூர் மாவட்டம் அவர்களுக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனை மற்றும் அபராதம் ரூ.10,000/- விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.சுந்தர்ராஜு, புத்தூர் கிராமம், திருச்சி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரர் குளித்தலை நெய்தலூரில் புதிதாக மின்கம்பம் அமைக்க கோரி சின்னபனையூர் மின்வாரிய அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து மேல்நடவடிக்கை எடுக்க திரு.நாராயணன், உதவி பொறியாளர், சின்னபனையூர் தமிழ்நாடு மின்பகிர்மான கழகம், கரூர் மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.2,000/- லஞ்சமாக தர வேண்டும் என கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை திருச்சி பிரிவில் கடந்த 10.08.2011ம் தேதி புகார் கொடுத்துள்ளார். புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு 10.08.2011ந் தேதி திரு.நாராயணன், உதவி பொறியாளர் புகார்தாரரிடம் லஞ்சப்பணம் ரூ.2,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கில் கரூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றம் நேற்று 16.12.2025 திரு.நாராயணன், உதவி பொறியாளருக்கு ஊழல் தடுப்பு சட்டம் 1988, பிரிவு-7ன்படி 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.5,000/- அபராதமும், பிரிவு 13 (2) r/w 13(1)(d) of PC Act படி 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும், ரூ.5,000/- அபராதமும் விதித்து ஏககாலத்தில் அனுபவிக்க தீர்ப்பு வழங்கப்பட்டது.